**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 5 / 2021**

பி.வா.சா.1 – அம்மாபொண்ணு 18.02.2026

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எனது கணவர் பாண்டியனின் அப்பா பெயர் பாக்கியம். மேற்படி பாக்கியத்தின் மனைவி பிச்சையம்மாள். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 வம்சாவழிப்பட்டியலில் குறிப்பிட்டுள்ள பிச்சையம்மாள், 1, 2 வாதிகள் பாண்டியம்மாள், முத்துமணி மற்றும் எனது கணவர் பாண்டியன் ஆகியோர் பாக்கியத்தின் வாரிசுகள் என்றால் சரிதான். எனது மாமனார் பாக்கியம் இரயில்வேயில் வேலை பார்த்து ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். எனக்கும் பாண்டியனுக்கும் திருமணமாகி சுமார் 40 வருடங்களுக்கு மேல் ஆகிறது. எனக்கு 1980ல் திருமணம் நடைபெற்றது. எனது திருமணத்திற்கு முன்பே 1ம் வாதிக்கு கேசவனுடன் திருமணமாகிவிட்டது என்றால் சரிதான். எனக்கு திருமணமாகி சுமார் 5 வருடங்களில் 2ம் வாதிக்கு திருமணமாகிவிட்டது என்றால் சரிதான். பாக்கியத்தின் வாரிசுகளுக்கு அவர் தான்திருமணம் செய்து வைத்தார் என்றால் 2ம் வாதிக்கு நாங்கள் தான் திருமணம் செய்து வைத்தோம். 2வது வாதிக்கு திருமணம் நடந்த போது எனது மாமனார் பாக்கியம் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் 2வது வாதிக்கு அவரது தகப்பனார் பாக்கியம் திருமணம் செய்து வைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தற்போது நான் தவறாக 2வது வாதிக்கு நாங்கள் திருமணம் செய்து வைத்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2வது வாதியின் கணவர் பெயர் மகாலிங்கம். மேற்படி மகாலிங்கத்தின் சொந்த ஊர் கல்லங்குளம் ஆகும். மகாலிங்கத்தின்

தாயார் விவாகரத்து பெற்றதால் மகாலிங்கம் சிறு வயது முதல் வன்னிக்கோட்டையில் வசித்து வந்தார். 2ம் வாதிக்கு குழந்தை பிறந்த உடன் அவரது கணவர் மகாலிங்கம் பிரிந்து சென்று வேறு ஒரு திருமணம் செய்து கொண்டார். 1ம் வாதி பாண்டியம்மாள் திருமணமாகி வெள்ளிக்குறிச்சியில் வசித்து வந்தார். எனது கணவர் கூட்டுறவு சங்கத்தில் வேலை பார்த்தார். எனது கணவர் பணிஓய்வு பெறுவதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பே பணியிலிருந்து நீக்கப்பட்டார். எனது கணவர் கூட்டுறவு சங்கத்தில் ரூ.35,00,000/- கையாடல் செய்ததாக பணியிலிருந்து நீக்கப்பட்டார் என்றால் சரிதான். எனது கணவர் பணியிலிருந்து நீக்கப்பட்ட போது எனது மாமனார் பாக்கியம் உயிருடன் இல்லை. எனது கணவர் எந்த ஆண்டு பணிநீக்கம் செய்யப்பட்டார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது மாமனார் பாக்கியத்தின் உடன்பிறந்தவர்கள் கருப்பு, சுப்பையா, கோபால் ஆவார்கள். மேற்படி கோபாலின் மகள் தான் எனது தாயார் சீனியம்மாள் ஆவார். எனது அம்மாவின் உடன் பிறந்தவர்கள் 4 பேர் ஆவார்கள். எனது மாமனார் மற்றும் அவரது உடன் பிறந்தவர்கள் பூர்வீக சொத்துக்களை எனது திருமணத்திற்கு முன்பே அவர்களுக்குள் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பிரித்த சொத்துக்களை தனித்தனியாக பட்டா மாற்றி அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். வாதிகள் 2 சொத்திற்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். நான் அந்த 2 சொத்திற்கு எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். அந்த 2 லக்க சொத்துக்களில் ஒன்று நத்தம் புறம்போக்கு 65 செண்டு மற்றொன்று லாடனேந்தலில் உள்ள 50 செண்டு சொத்து ஆகும். மேற்படி இரண்டு சொத்துக்களுக்கும் எனது மாமனார் பாக்கியம் பெயரில்

தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். நான் குடியிருந்து வரும் தார்சு வீடு வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதுபோல 1 1/2 செண்டு அளவுள்ள ஓட்டுவீடு இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி ஓட்டு வீட்டிற்கு எனது மாமனார் பாக்கியம் பெயரில் இன்று வரை பட்டா உள்ளது என்றால் சரிதான். எனது மாமனார் பாக்கியத்தின் சொத்துக்களை பொறுத்து அவரது வாரிசுகளுக்கிடையே இதுநாள் வரை பாகப்பிரிவினை ஏதும் நடைபெறவில்லை என்றால் சரிதான். நானும் 1, 2 வாதிகளும் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு பேசிக்கொள்வது இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நாங்கள் நன்றாக பேசிக்கொண்டிருந்தோம். நான் 2ம் பிரதிவாதி கவியரசனை 2000ம் ஆண்டு தத்து எடுத்தேன். மேற்படி கவியரசனின் அப்பா பெயர் தங்கபாண்டியன் அம்மா பெயர் கலாவதி ஆகும். கவியரசனை எங்கள் உறவினர்கள் முன்னிலையில் குல வழக்கப்படி தத்து எடுத்தோம். கவியரசனை திருப்புவனம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தத்து எடுத்தோம். பி.வா.சா.ஆ.1 தத்து பத்திரத்தின் அசல் ஆவணம் என்னிடம் தான் உள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1,2 வாதிகளோ அவரது கணவன்மார்களோ கையொப்பம் செய்துள்ளார்களா என்றால் கையொப்பம் செய்யவில்லை. கவியரசன் சென்னையில் மின்சார வாரியத்தில் பொறியாளராக வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். கவியரசனின் திருமணம் திருப்புவனத்தில் நடைபெற்றது வரவேற்பு வன்னிக்கோட்டையில் நடந்தது. கவியரசனின் திருமண பத்திரிக்கையில் அவரது பெற்றோர்களாக தங்கபாண்டியன், கலாவதி பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் சரியல்ல எங்கள் பெயர் முதலில் போட்டு அதன் பின்பு அவர்களது பெயர் போடப்பட்டிருந்தது. கவியரசன் வேலை நிமித்தமாக தற்போது சென்னையில் வசித்து வருகிறார். கவியரசனின் பணிப்பதிவேடு மற்றும் கல்விச்சான்றிதழ்கள் மற்றும் அரசு ஆவணங்களை பார்வையிட்டால் தாயார் தகப்பனார் பெயர் என்ன குறிப்பிட்டுள்ளார் என்று தெரியவரும் என்றால் சரிதான். கவியரசனின் தகப்பனார் தங்கபாண்டியனின் ஊர் சோழவந்தான் ஆகும். கவியரசனின் தாயார் கலாவதியின் ஊர் திருச்செந்தூர் ஆகும். கவியரசனின் தகப்பனாருக்கும் தாயாருக்கும் காதல் திருமணம் நடைபெற்றது அதை நாங்கள் தான் செய்து வைத்தோம். அதிலிருந்து தான் அவர்கள் எங்களுக்கு பழக்கம் என்றால் சரிதான். தங்கப்பாண்டிக்கும் கலாவதிக்கும் எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்று எனக்கு ஞாபகம் இல்லை. திருமணத்திற்கு பின்பு அவர்கள் 6 மாதம் வன்னிக்கோட்டையில் இருந்து அதன் பிறகு சென்னை சென்றுவிட்டார்கள். கலாவதி, தங்கப்பாண்டிக்கு 3 மகன்கள். நானும் எனது கணவரும் கவியரசனை தத்து எடுத்ததாக தவறாக சொல்கிறேன் என்றும் தத்து எடுத்த விபரம் வாதிகளுக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் மத சடங்குகள் செய்து தத்து எடுத்திருந்தால் 1, 2 வாதிகளையும் அவர்கள் குடும்பத்தினரையும் அழைத்து தத்து எடுத்திருப்போம், முறைப்படி மத சடங்குகள் எதுவும் செய்யப்படவுமில்லை நாங்கள் தத்து எடுக்கவும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் கவியரசன் எனக்கும் எனது கணவருக்கும் தத்து பிள்ளை இல்லை என்றும் தத்து பிள்ளையாக வளர்க்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த தாவா

சொத்துக்களில் கவியரசனுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 1 1/2 செண்டு இடத்திலுள்ள ஓட்டுவீட்டை எனது அண்ணன் மகன் 3வது பிரதிவாதி குமாருக்கு 2007ல் கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். அந்த ஓட்டுவீடு இடிந்த நிலையில் உள்ளது என்றால் சரிதான். எனது உடன் பிறந்த சகோதரர் பாஸ்கரனின் மகன் தான் 3ம் பிரதிவாதி குமார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி குமாருக்கு கிரையம் கொடுத்த சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்றால் நான் அந்த வீட்டில் குடியிருந்ததன் பேரில் எனக்கு பாத்தியமானது. நான் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த சொத்தை எனக்கு தனிப்பட்ட முறையில் யாரும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் அந்த சொத்து எனது கணவருக்கு பூர்வீக பாத்தியம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் நான் வாதிகளிடமும் வாதி குடும்பத்தினரிடமும் கையொப்பம் பெறவில்லை. தாவா 2வது லக்க சொத்தை பொறுத்து வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் எனது உடன்பிறந்த சகோதரரின் மகனான 3ம் பிரதிவாதிக்கு எவ்வித பிரதிபிரயோஜனமும் பெற்றுக்கொள்ளாமல் பி.வா.சா.ஆ.2 பெயரளவில் எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் 3ம் பிரதிவாதிக்கு எந்தவித உரிமையும் சித்திக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா 2வது லக்க சொத்திற்கு இன்று வரை எனது மாமனார் பாக்கியம் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். தாவா 2வது லக்க சொத்தை 3ம் பிரதிவாதி ஒருபோதும் அனுபவம் செய்ததில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணம் வாதிகளுக்கு தெரியாமல் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணம் ஒரு வீட்டு

மனையை எழுதிக் கொடுத்த ஆவணம் ஆகும் அந்த ஆவணம் 4ம் பிரதிவாதியின் தந்தை பெயரிலுள்ள ஆவணம் ஆகும். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் நத்தம் நில அளவை எண் 121/9 என குறிப்பிடப்பட்டுள்ளது அந்த சொத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் எனது மாமனார் பாக்கியம் பெயரில் பட்டா உள்ளது. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்ட சொத்து எனது மாமனாருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.3 ல் கண்ட சொத்து எனது தார்சு வீட்டிற்கு அருகில் உள்ள சொத்து என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ல் கண்ட சொத்து எனது மாமனார் பாக்கியத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து அல்ல அவரது பங்காளிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ல் கண்ட சொத்து இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி பொன்மணியின் அப்பா பெயர் பம்பை ஆகும். எனது கணவர் பாண்டியன் 5ம் பிரதிவாதியின் தந்தை அஞ்சுறானுக்கு 12 செண்டை கிரையம் கொடுத்துள்ளார் அதனால் 5ம் பிரதிவாதியை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன். பி.வா.சா.ஆ.4 5ம் பிரதிவாதி பெயரிலுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. பி.வா.சா.ஆ.4 ஆவணம் இந்த வழக்கு நிலுவையில் உள்ள போது ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மொத்தம் 65 செண்டில் எனது கணவர் 12 செண்டை கிரையம் கொடுத்தார். அந்த சொத்து மொத்தம் 70 செண்டு 65 செண்டு இல்லை என்றால் சரியல்ல. அந்த சொத்து தான் இந்த வழக்கின் 1ம் லக்க சொத்து என்றால் சரிதான். எனது கணவர் கிரையம் கொடுத்த 12 செண்டில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான். தாவா 1வது லக்க சொத்திற்கு இன்று வரை எனது மாமனார் பெயரில் பட்டா

உள்ளது என்றால் சரிதான். நானும் 2ம் பிரதிவாதி கவியரசனும் 02.04.2013ல் பாகம் செய்துகொண்டதாக எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது நானும் கவியரசனும் பாகம் செய்து கொண்ட பாக பத்திரத்தின் சான்றிட்ட நகல் ஆகும் அது வா.சா.ஆ.15 ஆகும். எனது கணவர் 5ம் பிரதிவாதியின் தந்தைக்கு 12 சென்டை கிரையம் கொடுத்து 7 வருடங்கள் கழித்து எனக்கு தெரிய வந்தது. எனது கணவர் 12 சென்டை கிரையம் கொடுத்தது வாதிகளுக்கு தெரியாது என்றால் தெரியும். வாதிகளுக்கு மேற்படி கிரையம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நானும் கவியரசனும் பாகம் செய்து கொண்ட சொத்துக்களுக்கு இன்று வரை எனது மாமனார் பாக்கியம் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். அந்த பாக பத்திரத்தில் எனது மாமனார் பாக்கியத்தின் வாரிசு சான்று இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். வாதிகளின் உரிமையை மோசடிசெய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் நானும் 2ம் பிரதிவாதியும் சேர்ந்து மோசடியாக வா.சா.ஆ.15 பாகபத்திரத்தை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனக்கும் எனது கணவர் பாண்டியனுக்கும் தனிப்பட்ட உரிமை எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து 1, 2 வாதிகள் அவர்களது உரிமையை எங்களுக்கு எப்போதும் விட்டுக்கொடுத்ததில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் இன்று வரை கூட்டுக்குடும்ப சொத்துக்களாக அனுபவம் செய்யப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. நானும் எனது கணவரும் வாதிகளின் குடும்பத்திற்கு பொருளாதார ரீதியாக எந்த ஒரு உதவியும் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. நானும் எனது கணவரும் 2ம் பிரதிவாதியின் பெற்றோருக்குத்தான் உதவி செய்து

அதனால் எனது கணவர் நிறைய கடன் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல அந்த கடனை அடைப்பதற்காகத்தான் எனது கணவர் கையாடல் செய்து பணியில் இருந்து நீக்கப்பட்டார் என்றால் சரியல்ல. நான் குடியிருந்து வரும் தார்சு வீடு இன்று வரை பாக்கியம் பெயரில் உள்ளது என்றால் இல்லை 2ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. அந்த வீட்டிற்கு கவியரசன் பெயரில் எப்போது பட்டா மாற்றப்பட்டது என்றால் சுமார் 4 வருடங்களுக்கு முன்பு மாற்றப்பட்டது. 2ம் பிரதிவாதி பெயரில் அந்த வீட்டிற்கு பட்டா உள்ளது என்பதை எனது எதிர்வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் ஏற்கனவே கிரையம் கொடுத்த 12 செண்டையும் சேர்த்து நானும் 2ம் பிரதிவாதியும் மோசடியாக 2013ல் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. வாதிகளின் சட்டப்படியான உரிமையை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் 2013ல் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. குடும்ப சொத்துக்களை பாகம் செய்யவேண்டும் என்று கிராம பெரியவர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது என்றால் சரியல்ல. அதில் உரிய முடிவு ஏற்படாததால் தான் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்த போது வாதிகள் வரவில்லை. நான் பேச்சுவார்த்தை நடைபெறவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளின் பங்கை நாங்கள் மோசம் செய்ய நினைத்ததால் தான் வாதிகள் பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5 ஆவணங்கள் வாதிகளின் பாகத்தை

கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் பாக்கியத்தின் வாரிசுகள் என்ற அடிப்படையில் வாதிகளுக்கு உரிய பங்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. எனது கணவர் பாண்டியனுக்கு பாக்கியத்தின் வாரிசு என்ற அடிப்படையில் 1/3 பங்கு மட்டும் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை